**சுருக்கம்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்கள் – அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் பணியமர்த்தப்படும் மதிப்புறு நூலகர்கள் நியமனம். கல்வி தகுதியினை தளர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண்.93 நாள்: 21.09.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.177, ஊ.வ (ம) ஊ. (மாஅதி–1) துறை, நாள் 25.10.2010.
2) அரசு கடித எண்.6135/ மாஅதி–1/2008–1, நாள் : 6.3.2008.
3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.202/10/அகிஅமதி–2, நாள் : 06.09.2010.

*****

**ஆணை:**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்கு கிராம ஊராட்சி நிதியிலிருந்து மதிப்புறு நூலகர்களை பணியமர்த்துதல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25.10.2007–ல் , வெளியிடப்பட்டன. அரசு கடித எண். 6135/மாஅதி1/2008–1, நாள் 6.3.2008–ல் அவ்வரசாணையில் குறிப்பிடப்பட்டிருந்த கல்வி, வயது மற்றும் வசிப்பிடம் குறித்து திருத்தங்கள் வெளியிடப்பட்டது.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 6.9.2010 நாளிட்ட கடிதத்தில் விழுப்புரம், ஈரோடு, சிவகங்கை, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் படிக்கப்பட்ட 2–ல் உள்ள அரசு கடிதத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளவாறு கல்வித்தகுதி கொண்ட உரிய நபர்கள் கிடைக்காததால் அம்மாவட்டங்களுக்கு மட்டும் இக்கல்வித் தகுதியினை தளர்த்தி ஆணை வெளியிடும்படி கோரியுள்ள கருத்துருவினை பரிந்துரை செய்து தக்க ஆணை வெளியிடும்படி அரசினை வேண்டியுள்ளார்.

3. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை பரிசீலனை செய்து அதனை ஏற்று, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் பணியமர்த்தப்படும் நூலகர்களின் கல்வித் தகுதியினை இரு ஆண்டுகளுக்கு மட்டும் தளர்வு செய்து, தகுதியானவர்கள் கிடைத்த பின்னர் இவர்களை விடுவிக்கலாம் என்றும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள பிற வழிகாட்டு நெறிமுறைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், விழுப்புரம், ஈரோடு, சிவகங்கை, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள், விழுப்புரம், ஈரோடு, சிவகங்கை, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.
மாவட்ட ஊராட்சிகள், விழுப்புரம், ஈரோடு, சிவகங்கை, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.
வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விழுப்புரம், ஈரோடு, சிவகங்கை, புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

அரசு ஆணை (நிலை) எண். 93 ஊ.வ(ம)ஊ(மாஅதி–1)துறை, நாள் : 21–09–2010

| வ. எண். | மாவட்டம் | ஒன்றியம் | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வருடம் |
|---|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | கல்வராயன் மலை | 1. அரம்பூண்டி<br>2. வஞ்சிக்குழி | 2006-07<br>2009-10 |
| 2. | புதுக்கோட்டை | ஆவுடையார்கோயில் | 1. ஒக்கூர்<br>2. வீரமங்கலம்<br>3. சத்தியக்குடி<br>4. பொன்பதி<br>5. தீயூர் | 2009-10<br>2009-10<br>2009-10<br>2009-10<br>2009-10 |
| 3. | சிவகங்கை | மானாமதுரை<br><br><br>திருப்புவனம் | 1. கல்பிரவு<br>2. அரசகுலம்<br>3. வி.புதுக்கோட்டை<br>4. முக்குடி<br>5. மேலரங்கம் | 2009-10<br>2009-10<br>2009-10<br>2009-10<br>2009-10 |
| 4. | விருதுநகர் | ராஜபாளையம்<br><br>திருச்சுளி | 1.கணபதி சுந்தரநாச்சியார்புரம்<br>2. கோபாலபுரம்<br>3. சுதாமடம்<br>4. சவஸ்புரம் | 2009-10<br><br>2009-10<br>2009-10<br>2009-10 |
| 5. | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் | 1. ஆறுமுக மங்கலம் | 2009-10 |
| 6. | ஈரோடு | தாளவாடி | 1. கீர்மளம்<br>2. அசனூர் | 2009-10<br>2009-10 |

கா. அலாவுதீன்,<br>
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' – 2010–16 – கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு வீட்டின் மாதிரி வடிவமைப்பு (model type design) மற்றும் சின்னம் / இலட்சினை (logo) – அறிவிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 85 நாள்: 12.08.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.68, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 14.06.2010.

2) அரசாணை (நிலை) எண்.74, ஊ.வ. (ம) ஊ. துறை, நாள் 16.07.2010.

3) அரசாணை (நிலை) எண்.81, ஊ.வ. (ம) ஊ. துறை, நாள் 5.8.2010.

4) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடித எண்.16263/2010/ KVVT, நாள் 09.08.2010.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் ஏனையவற்றிற்கிடையே கலைஞர் வீடு வழங்கும் திட்ட வீடுகளுக்கென தனி மாதிரி வடிவமைப்பு தயாரிக்கப்படும் எனவும், ஒவ்வொரு வீட்டின் முகப்பிலும், இத்திட்டத்திற்கான சின்னம் மற்றும் பயனாளியின் பெயர் வண்ணம் தீட்டப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு மாதிரி வடிவமைப்பு மற்றும் சின்னம் அனுப்பி அரசின் ஒப்புதல் கோரியுள்ளார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு மாதிரி மதிப்பீடு தன்னால் தனியே வெளியிடப்படும் எனவும், பயனாளிகளே தங்கள் வீடுகளை கட்டிக் கொள்வதால், மனையின் அமைப்புக்கும், அளவிற்கும் ஏற்றவாறு மாதிரி

வடிவமைப்பிலிருந்து தேவையான சிறு மாற்றங்களைச் செய்து கட்டிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்து, அதன்மீதும் அரசின் ஆணை கோரியுள்ளார்.

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள வீடுகள் இவ்வாணையின் இணைப்பு – I - மற்றும் II-ல் காணப்படும் மாதிரி வடிவமைப்பைப் (model type design) போல் கட்டப்பட வேண்டும்.

(ii) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள ஒவ்வொரு வீட்டின் முகப்பில் இணைப்பு– III-ல் காணப்படும் இலட்சினை / சின்னம் (logo) வண்ணம் தீட்டப்பட வேண்டும்.

(iii) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படும் வீட்டிற்கான மாதிரி மதிப்பீடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தனியே வெளியிடப்படும்.

(iv) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் பயனாளிகள் தங்கள் வீடுகளை தாங்களாகவோ அல்லது தங்களின் முகவர்கள் மூலமாகவோ கட்டப்படவுள்ளதால், காலி மனையின் அமைப்புக்கும், அளவிற்கும் ஏற்றவாறு மாதிரி வடிவமைப்பில் (model type design) தேவைக்கேற்ப சிறு மாற்றங்களைச் செய்து வீடுகளைக் கட்டிக் கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

காள. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

**<u>நகல்</u>**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.